வேலூர் மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலரின் செயல்முறைகள்,
முன்னிலை : திரு.க. முனுசாமி, M.Sc.,M.A.,B.Ed.,M.Phil.,MBA.,
ந.க.எண். 3098/ஆ1 /2022 நாள் : 25.08.2022

-----

பொருள் : பள்ளிக் கல்வி வேலூர் மாவட்டம்– புதிய தலைமுறை தொலைக்காட்சி – ஆயுதம் செய்வோம், என்னும் புதிய நிகழ்ச்சி நடைபெற்றுவருவது – " வீட்டுக்கு ஒரு விஞ்ஞானி 2022" என்ற நிகழ்ச்சி – மாவட்ட – அளவிலான போட்டி 09.09.2022 வெள்ளிக்கிழமை அன்று – வேலூர் மற்றும் மாதனூரில் நடைபெறுவுள்ளது – ஆர்வமும் திறமையும் உள்ள மாணவர்கள் கலந்து கொள்ளதற்கு உரிய நடவடிக்கை மேற்கொள்ளத் தெரிவித்தல் – தொடர்பாக.

பார்வை :
1. தமிழ்நாடு பள்ளிக்கல்வி ஆணையரின் செயல்முறைகள் , சென்னை– 6, ந.க.எண்.00743/எம்/இ2/2022, நாள் 27.06.2022.
2. புதிய தலைமுறை, வேலூர் மாவட்ட நிர்வாகியின் கடிதம் நாள் 16.08.2022

-----

பார்வை–1இல் காணும் செயல்முறைகளில், புதிய தலைமுறை என்ற தனியார் தொலைக்காட்சி நிறுவனத்தால் 'ஆயுதம் செய்வோம்' என்றும் புதிய நிகழ்ச்சி மூலம் " வீட்டுக்கு ஒரு விஞ்ஞானி 2022" வழங்கி வருவதாகவும் மனிதகுலத்தின் நலனுக்காக புதுமையும் எளிமையும் இணைந்த புதுப்புது கருவிகளைக் கண்டுபிடிக்கும் புதிய விஞ்ஞானிகளையும் அவர்களது கண்டுபிடிப்புகளையும் அறிமுகப்படுத்தி கௌரவிப்பதே 'ஆயுதம் செய்வோம்' நிகழ்ச்சியின் நோக்கம் எனவும், இந்த நிகழ்ச்சியை முதல் கட்டமாக தமிழகத்தில் உள்ள அனைத்து மாவட்டங்கள் தோறும் நடத்த இருப்பதாகவும் இந்நிகழ்ச்சியில் பள்ளிக் கல்வித் துறையின் கீழ் இயங்கும் அனைத்து மாவட்டங்களில் உள்ள அரசு, அரசு உதவி பெறும் மற்றும் மெட்ரிகுலேசன் பள்ளிகளில் பயிலும் அறிவியல் ஆர்வம் உள்ள மாணவர்கள் பங்கேற்க உரிய அனுமதி வழங்கிட தெரிவிக்கப்பட்டுள்ளது.

பார்வை–2 இல் காணும் கடிதத்தின்படி, வீட்டுக்கு ஒரு விஞ்ஞானி 2022 என்ற நிகழ்ச்சியின் மாவட்ட அளவிலான போட்டி வேலூர் மாவட்டத்தில், **02.09.2022** வெள்ளிக் கிழமை அன்று **Sri Saraswathi Vidhyalaya Matric Higher secondary School, Palur, Madanur** என்ற முகவரியில் நடக்கும் நிகழ்ச்சியில் அணைக்கட்டு, குடியாத்தம், பேர்ணாம்பட்டு ஒன்றியங்களைச் சார்ந்த மாணவர்களும்

**09.09.2022** வெள்ளிக்கிழமை அன்று **Velammal Bodhi campus, Periya allapuram, Thorapadi, vellore** என்ற முகவரியில் நடைபெறும் நிகழ்ச்சியில் வேலூர், கணியம்பாடி, காட்பாடி கே.வி.குப்பம் ஒன்றியங்களைச் சார்ந்த மாணவர்களும் கலந்துகொள்ளலாம்.

மேற்காண் போட்டியில் , ஆர்வமும் திறமையும் உள்ள 6 முதல் 12 ஆம் வகுப்பு வரை பயிலும் மாணவ / மாணவியர்கள் கலந்து கொண்டு தங்களது அறிவியல் படைப்புகளை (Working Model) செயல்படுத்திக்காட்டி, அவர்களது திறமையினை வெளிப்படுத்திடுவதற்கு உரிய நடவடிக்கை மேற்கொள்ளுமாறு வேலூர் கல்வி மாவட்டத்தில் உள்ள அனைத்து வகை நடுநிலை/ உயர்நிலை / மேல்நிலைப்பள்ளித் தலைமையாசிரியர்கள் / முதல்வர்கள்/ வட்டாரக்கல்வி அலுவலர்கள் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

இணைப்பு– பார்வையில் காணும் கடிதங்கள்
மற்றும் விதிமுறைகளின் நகல்

ஓம்/–க.முனுசாமி,
முதன்மைக் கல்வி அலுவலர்,
வேலூர்.

குறிப்பு – பேருந்து வசதி மற்றும் மதிய உணவு வழங்கப்படும் என

தெரிவிக்கப்பட்டுள்ளது. தொடர்பிற்கு தொலைபேசி எண். 9994499524 / 8754417330)

பெறுநர்
தலைமையாசிரியர்கள்/ முதல்வர்கள்,
அனைத்து அரசு, அரசு உதவி பெறும், மெட்ரிகுலேசன் மற்றும் சி.பி.எஸ்,.இ. நடு/ உயர்/ மேல்நிலைப்பள்ளிகள், வேலூர் மாவட்டம்
நகல்– மாவட்டக் கல்வி அலுவலர்,வேலூர்.
நகல்– இயக்குநர், புதிய தலைமுறை தொலைக்கட்சி நிறுவனம் , சென்னை– 32..

ப..ரா.,

ப..ரா.,